பொற்காலமாக இன்றைக்கு ஆட்சி நடத்தி வருகிற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் இன்றைக்கு நெல் பயிரிடுபவர்கள் எல்லாம் நாங்கள் இந்த முதல்வர் அவர்கள் ஆட்சியில் கரும்பையே பயிர் செய்யலாமா என்று நினைக்கிற அளவுக்கு சாதனை செய்து கொண்டிருக்கிற இந்த நல்ல வேளையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவிடைமருதூர் பகுதியில் கும்பகோணம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் இந்த ஆலையை நிறுவுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையையும் நான் தெரிவித்துக் கொண்டு, செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை, தனியார் ஒருவருக்கு, ஆரூரான் சர்க்கரை ஆலை என்போருக்கு இந்த ஆலைக்கான அனுமதி கொடுக்க வேண்டுமென்று தமிழக அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறது. மத்திய அரசு அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அனுமதி கிடைத்த பிறகு எந்தப் பகுதியில் அமைக்க வேண்டுமென்று பின்னாலே முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 192, திரு.வே. பெரியசாமி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

192—

பட்டுநூல் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

***37030**—*திரு. வே. பெரியசாமி:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், பவானி, சத்தியமங்கலம் வட்டங்கள் கைத்தறியின் மூலம் சிறந்த பட்டு, சைனா சீகோ சேலைகளை நவீன முறையில் உற்பத்தி செய்யும் பகுதியாக உள்ளபடியால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தொழில் செய்ய பட்டு நூல் கிடைக்காமல் இருப்பவர்களுக்கு உதவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பட்டு நூல் தட்டுப்பாடு இல்லை. தட்டுப்பாடு ஏற்படுமாயின் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அந்தியூர் தொகுதியிலும் அருகில் உள்ள சத்தியமங்கலம் தொகுதியிலும் உள்ள நாலுரோடு, சதுமுகை, தொட்டம்பாளையம், ஆலம்பாளையம் போன்ற பகுதிகளில் ஏராளமாக கைத்தறியில் வல்லுநர்களாக சிறந்த பட்டு, சைனா சீகோ சேலைகளை அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய நெசவாளர் பெருங்குடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே கூட்டுறவு சொசைட்டி மூலமாக பட்டு கிடைக்காத காரணத்தால் அண்டை மாநிலமாகிய மைசூருக்குச் சென்று, பெங்களூரில் அதிக விலை கொடுத்து பட்டு நூலை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து நெசவு செய்கிற காரணத்தால் அவர்களுக்கு போதிய தினக்கூலியும் கிடைக்கவில்லை. அந்தச் சேலையின் விலையை அதிகமாக வைத்து விற்கவேண்டிய துர்பாக்கியமான சூழ்நிலைக்கு உந்தப்படுகிற காரணத்தால், மாண்புமிகு சிறப்புமிகு நம்முடைய சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் எல்லாத் துறைகளிலும் சிறப்பாகச் செய்யக்கூடிய ஆற்றல் பெற்ற அம்மையார் அவர்கள்....

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு வேண்டிய விவரத்தைப் பற்றிக் கேளுங்கள், அமைச்சருக்குப் புகழாரம் சூட்டிக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. வே. பெரியசாமி : நான் கடவுளாக வணங்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நெசவாளர்களுக்கு இந்த ஆண்டு 2000 தறிகளோடு கூடிய வீடுகளைக் கட்டிக் கொடுத்து மிகச் சிறப்பான முறையில் வாழவைத்துக் கொண்டிருக்கிற இந்த நல்ல நேரத்தில், அந்தப் பகுதிகளிலே குறைந்த விலையில் பட்டு நூல் கிடைக்க ஆவன செய்வார்களா? நீங்கள் கிடைக்கிறது என்று சொல்கிறீர்கள். அங்கே கிடைக்கவில்லை என்பதை உங்களுடைய கனிவான பார்வைக்குப் பணிவாக தெரிவித்து, ஆவன செய்வார்களா என்று அடியேன் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு பட்டு நெசவாளர் சங்கங்கள் இருந்தால், அவைகளுக்குத் தேவையான பட்டு நூலை, டான்சில்க் மற்றும் காஞ்சிபுரம் முதலியவற்றிலிருந்தும், சில்க் எக்சேஞ்ச் ஆகியவற்றின் மூலமும் கொள்முதல் செய்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நாங்கள் வழங்கி வருகிறோம். ஆனால், பட்டு நூலை உற்பத்தி செய்து, அதுவே பட்டுப் புடவையாக

1995 ஏப்ரல் 3]

வருகிற வேளையில், அதை அவர்கள் திரும்ப கோ-ஆப்டெக்சுக்கு அளிப்பதில்லை. ஒருசில அளவிற்குத்தான் அளிக்கிறார்கள். மற்றவைகளை எல்லாம் அவர்கள் நேரடியாக நல்ல லாபத்திற்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். சமீபகாலத்திலே தட்டுப்பாடு ஏதும் இந்த நூலிலே எழவில்லை. அப்படி தட்டுப்பாடு ஏற்படுகின்ற காலங்களில் தேவைக்கேற்ப அரசு மேற்படி பட்டு உற்பத்தி நிறுவனங்கள் மூலமும், தேவைப்படின் சைனா போன்ற நாடுகளிலிருந்தும் பட்டு நூலை இறக்குமதி செய்வதற்குத் தகுந்த நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும். ஆனால், தனியார்கள் வைத்திருக்கிற தறிகளின் மூலமாக நெய்யப்படுகிற பட்டுச் சேலைகளுக்கு உரிய பட்டு நூல்களை, சீக்கோ சேலை போன்று உற்பத்தி செய்கின்ற தனியார் நெசவாளர்களைப் பொறுத்தவரை, அவர்கள் தேவையான பட்டினை வெளிச்சந்தையிலே வாங்கிக் கொள்கிறார்கள். அவர்கள் நம்மிடத்திலே வாங்குவதில்லை. இப்போது 88 பட்டு கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்கள் இருக்கின்றன. அதற்கு 24 ஆயிரம் கிலோ பட்டு தேவைப்படுகிறது. அவ்வளவு பட்டுத் தேவையையும் முழுமையாக இந்த அரசு பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட குறைபாடுகள் ஏதும் நெசவாளர்களிடத்திலிருந்து எங்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை. அப்படிக் கிடைத்தால், அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து செய்யும். அவர்களுக்குத் தரக்கூடிய அளவிற்கு இங்கே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு சட்ட மன்ற பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 20-1-1995 ஆம் தேதி மத்திய கைத்தறி நூல் துறை அமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து இங்கேயுள்ள ஏழை நெசவாளர்களுக்காக நூலின் விலையைக் குறைக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 15 ரூபாயிலிருந்து இன்றைக்கு 20 ரூபாயாக உதவியை, உபகாரத் தொகையை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நல்ல நேரத்தில் `National Institute of Fashion Technology' போன்ற ஆடை வடிவமைப்பு தேசிய தொழில்நுட்பம் நிறுவனத்தை எல்லாம் கேட்டவுடனே கொடுத்தார்கள். அதற்கு நன்றியையும் மறவாமல் சொன்ன, ஒப்பற்ற இதயத் தாய், புனிதத் தாய், தானைத் தலைவியின் ஆட்சியில், நீங்கள் நிறைய பட்டு நுலை வழங்கிக் கொண்டிருப்பதாகச் சொன்னீர்கள். ஆனால், அந்தப் பகுதியில், சத்தியமங்கலம், மற்றும் அந்தியூர் போன்ற பகுதிகளில் மைசூரிலிருந்துதான் நூலை அதிக விலைக்கு வாங்கிக் கொண்டு வருகிறார்கள். எனவே, அருள்கூர்ந்து அந்தப் பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்களை எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களிலே

உறுப்பினர்களாக்கி, அவர்களுக்குக் குறைந்த விலையில் நூல் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். நம்முடைய சத்தியமங்கலம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் இன்றைக்கு அணிந்து வந்திருக்கிறாரே அதுதான் சீக்கோ சேலை. அப்படிப்பட்ட சேலைகளை எல்லாம் இன்றைக்கு குறைந்த விலையில் உற்பத்தி செய்து, நெசவாளர்கள் அதிக லாபம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். அதற்கு ஆவன செய்வார்களா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நெசவாளர்களுக்காக அதிக நடவடிக்கைகளை எடுத்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அவர்களுக்கு நூல் பிரச்சினை இல்லாமல் செய்வதற்கும், பாடுபட்ட ஒரே தலைவி, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஒருவர்தான்.(மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்கின்ற சங்கங்களிலிருந்து எங்களுக்கு அதிகமான நூல் தேவை என்று இதுவரையிலும் யாரும் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லை. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், அப்படி எந்தப் புகாரைக் கொடுத்தாலும் உடனடியாக அவர்களுக்கு அந்தந்த நேரங்களிலே கூடுதலாக நூலை வழங்கிக் கொண்டு வருகிறோம். அந்த வகையிலே இந்தச் சங்கங்கள் எங்களிடத்திலே அணுகி இப்போது கொடுக்கிற நூல் பற்றாக்குறையாக இருக்கிறது, இன்னும் தேவை என்று சொன்னால், அதற்குரிய நூலை வழங்குவதற்கு அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 193, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

193—

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கட்டிடம் கட்டுதல்

*** 39088—***டாக்டர் எஸ். சுந்தரராஜ் :*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட நிலம் கையகப்படுத்தும் போது நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் கட்டுவதற்கும் சேர்த்து இடம் கையகப்படுத்த அரசு முன்வருமா ?